செய்தி வெளியீடு எண்.609 நாள்.27.07.2008

# செய்தி வெளியீடு

## பெங்களூரு மற்றும் அகமதாபாத் நகரங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களை தொடர்ந்து தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் முதலமைச்சர் கலைஞர் ஆய்வு

பெங்களூரு மற்றும் அகமதாபாத் ஆகிய மாநகரங்களில் கடந்த இரண்டு நாள்களாக நிகழ்ந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவங்களைத் தொடர்ந்து தமிழகத்தின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், இனி மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முடிவுகள் மேற்கொள்வதற்காகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (27.7.2008) மாலை 4.00 மணி அளவில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மேற்படி சம்பவங்கள் குறித்து ஏற்கனவே தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டங்களின் விவரங்களையும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் பரிசீலித்ததுடன், தொடர்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகளை வழங்கினார். காவல்துறையினர் மிகுந்த விழிப்புடன் செயல்பட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு, மக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் கூடுதல் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.கே.பி. ஜெயின், இ.கா.ப., சட்டம் ஒழுங்கு கூடுதல் காவல்துறை தலைமை

**இயக்குநர் திரு.கே.விஜயகுமார், இ.கா.ப., சென்னை மாநகர காவல் ஆணையர் திரு. ஆர்.சேகர், இ.கா.ப., பொதுத்துறைச் செயலாளர் மற்றும் உள்துறை பொறுப்பு வகிக்கும் திரு. தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., சென்னை புறநகர் காவல் ஆணையர் திரு. ஜாங்கிட், இ.கா.ப., காவல்துறைத் தலைவர் (நுண்ணறிவு) திரு.ஜாபர் சேட், இ.கா.ப., வடக்கு மண்டல காவல்துறைத் தலைவர் திரு. இராதாகிருஷ்ணன், இ.கா.ப, நுண்ணறிவுப் பிரிவு காவல்துறை துணைத் தலைவர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப, சிறப்புப் புலனாய்வுத்துறை காவல் கண்காணிப்பாளர் திரு. சி. சந்திரசேகர், இ.கா.ப, ஆகியோர் கலந்துகொண்டனர்.**

* * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**